
## திராவிடத்தால் வாழ்கிறோம்

792

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

103

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எம்.எஸ்.கே.சத்தியேந்திரன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# ‘சேது நாட்டு வாகை மலர்!’

“ராமநாதபுரம் பகுதியில் ஒரு மந்திரச் சொல். மின்சார வார்த்தை; காந்தத்தின் ஈர்ப்பு; எனக்கோ என் இதயத் துடிப்பு” என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய அன்பு உடன்பிறப்பு எம்.எஸ்.கே.சத்தியேந்திரன். “அவருக்கும், அவரது சகோதரர்களுக்கும் எனக்குமான உறவு பட்டுப்போகாத அண்ணன் தம்பி பாச உணர்வு” என 1991-ஆம் ஆண்டு ராமநாதபுரம் பொதுக்கூட்டத்தில் கலைஞர் பேசிய உரை, இதயத்தின் சொற்களாகக் கழகத் தொண்டர்களிடம் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

1940-ஆம் ஆண்டு, ராமநாதபுரத்தில் பிறந்தவர் சத்தியேந்திரன். அவரது தந்தை எம்.எஸ்.குப்புசாமி, ராமநாதபுரம் நகரமன்றத் தலைவராக இருந்தவர். தாயார் அமிர்தம்மாள். தந்தையார் கொண்டிருந்த செல்வாக்கு, மகனை சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படிக்க வைத்தது. சென்னைக்குப் படிக்க வந்தவர், பேரறிஞர் அண்ணா அன்றைக்கு நிகழ்த்திக் கொண்டிருந்த அரசியல் பாடத்துடன் ஊருக்குச் சென்றது, அவர்கள் குடும்பத்தினரே எதிர்பாராதது. ஆனால், சத்தியேந்திரன் கொண்டிருந்த கழக உறுதி, அவரை விரைவிலேயே மக்கள் செல்வாக்கு கொண்டவராக மாற்றியது. கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் எம்.எஸ்.கே.சத்தியேந்திரனைத் தவறாமல் பார்க்கலாம். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் துடிப்புமிக்க இளைஞராகக் களத்தில் நின்றவர் சத்தியேந்திரன்.


### நகர் மன்றமும் சட்டமன்றமும்!

தந்தையார் உருவாக்கி இருந்த குடும்பச் செல்வாக்கு இருந்தாலும், சத்தியேந்திரன் கொண்டிருந்த கழக உறுதியே 1971-ஆம் ஆண்டு, ராமநாதபுரம் நகரமன்றத் தலைவராக அவரை உயர்த்தியது. அதே ஆண்டு ராமநாதபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, கலைஞரின் அவையில் இடம் பிடித்தவர் சத்தியேந்திரன். அதேகாலகட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டச் செயலாளராகத் தொடர்ந்து இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நெருக்கடி நிலைக் காலத்தில், கழகத்தினர் கூட்டமாக சந்தித்துக் கொள்ள முடியாத நிலையில், தனது வீட்டின் பின்பக்கம் விவசாய நிலத்திலேயே பயிர்களை அழித்துவிட்டு, கழகக் கூட்டம் நடத்தியவர் சத்தியேந்திரன். மிசா சிறைக் கொட்டடிகளில் இவர் பெயரையும் மதுரை மத்திய சிறை பதிவு செய்துள்ளது.

### இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு

1983-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 25-ஆம் தேதி, இலங்கை ‘வெலிக்கடை சிறை’யில் 35 தமிழர்கள் கொடூரமாக கொல்லப்பட்டதைக் கண்டித்து, தமிழ்நாடே கொந்தளித்தது. ஜூலை 27-ஆம் தேதி இலங்கையில் தொடங்கிய வன்முறையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்ட தகவல்களும் வந்தன. ஜூலை 31-ஆம் தேதி, சென்னையில் தங்கியிருந்த குட்டிமணி, ஜெகன் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் சொன்ன கலைஞர், ஜூலை 31-ஆம் தேதி, ஏற்கெனவே திட்டமிட்ட முகவை மாவட்டக் கழக மாநாட்டினை ‘இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடாக’ அறிவித்து, ராமநாதபுரத்தில் நடத்தினார். அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் சத்தியேந்திரன், மிகக் குறுகிய காலத்துக்குள் எழுச்சியும் உணர்ச்சியும் பொங்கிய மிகப்பெரிய அரசியல் மாநாட்டினை நடத்திக் காட்டினார். அந்த மாநாட்டில்தான் ஈழத்தமிழர் தொடர்பாக கழகத்தின் அறப்போராட்டங்கள் தீட்டப்பட்டன.


ஓவியம் : ரவி பேலட்

1980-ஆம் ஆண்டு, சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் சேர்ந்து தேர்தல் நடந்தபோது, ராமநாதபுரம் தொகுதியில் சத்தியேந்திரன் நின்றார். அருப்புக்கோட்டையில் அதற்கு முன் வெற்றிபெற்றிருந்த எம்.ஜி.ஆர், சத்தியேந்திரனின் வெற்றிவாய்ப்பினை அறிந்து தனது தொகுதியை மாற்றிக் கொண்டார் என்பார்கள். ‘எம்.ஜி.ஆர்., தனது ஆட்சிக் காலத்தில், சத்தியேந்திரனுக்கு ‘அமைச்சர் பதவி தருகிறேன் வா’ என அழைத்துள்ளார். சத்தியேந்திரனுக்கு உடல்நலம் சரியில்லாதபோது, அவரை வெளிநாட்டுக்கு அனுப்பி மருத்துவம் பார்க்க எம்.ஜி.ஆர். பண உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் அழைப்பு வந்துள்ளது. ஆனால், அதையெல்லாம் அவர் பொருட்படுத்தவேயில்லை, காரணம் கலைஞர் பற்று என்பதைச் சொல்லத் தேவையில்லை.

### உள்ளாட்சித் தேர்தலும் மறைவும்!

1986-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றத் தேர்தல் நேரம். வேட்புமனுத் தாக்கல் செய்ய இறுதி நாள் ஜனவரி 30-ஆம் தேதி. கழகத்தினர் தீயாக வேலை செய்து கொண்டிருக்கின்றனர். அன்பகத்தில், ஜனவரி 28-ஆம் தேதி, ராமநாதபுரம் மாவட்ட வேட்பாளர்கள் பட்டியலை இறுதி செய்து கலைஞர் கைகளில் அளித்துவிட்டுப் புறப்பட்டார் மாவட்டச் செயலாளர் சத்தியேந்திரன்.

> **“சத்தியேந்திரன் அவர்களின் உழைப்பும், கலைஞரின் குறிப்பும் என்றென்றைக்கும் உடன்பிறப்புகளின் நெஞ்சங்களை விட்டு நீங்காது, நிலைத்து நிற்கும்.”**

ஜனவரி 29-ஆம் தேதி, கலைஞரின் இதயத்தில் இடியாக இறங்கியது சத்தியேந்திரன் அவர்களின் இறப்புச் செய்தி. ‘எத்தனை கூர்வாய்ந்த ஈட்டி என் இதயத்தில் பாய்ந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருக்கும் என்பதை நீ அறிந்து கொண்டுதானிருப்பாய் உடன்பிறப்பே’ என இரங்கல் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, இறுதி மரியாதை செலுத்த ராமநாதபுரம் செல்ல ரயில் ஏறினார் கலைஞர்.

‘கண்ணீர்க் கடலில் என் தம்பி சத்தியேந்திரன் உடல் தெப்பமாக மிதக்கும் காட்சியைக் காணச் செல்கிறேன்’ என இரங்கல் கடிதத்தில் அவர் குறிப்பிட்டது போலவே, அன்றைய ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டமே திரண்டுவந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. தென் மாவட்டக் கழகமே திரண்டிருந்தது.

‘அஞ்சலி செலுத்த வந்த முன்னாள் அமைச்சர் அன்பில், கதறி அழுது மயக்கமடைந்தார். அ.தி.மு.க. கொடிகளும் அரைக் கம்பத்தில் பறந்தன’ என அன்றைய மாலைப் பத்திரிகைகள் அவரின் மறைவைப் பதிவு செய்துள்ளன.

### எஸ்.எஸ்.தென்னரசு வளர்ப்பு!

‘சேது நாட்டுச் செல்லப்பிள்ளையே, செந்தாமரை மலரே’ என அன்றைய அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு வெளியிட்ட இரங்கல் மடல், துக்கத்தின் உச்சம். அவரால் கட்சியில் வளர்க்கப்பட்டவர் சத்தியேந்திரன், அன்றைய ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டச் செயலாளராக இருந்த எஸ்.எஸ்.தென்னரசுக்குப் பின்னர், அந்தப் பொறுப்புக்கு வந்தவர் சத்தியேந்திரன். சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக அவரை வெற்றிபெற வைத்த பெருமை தென்னரசுவையே சாரும். 1986-ஆம் ஆண்டு தேர்தலில் ‘ராமநாதபுரம் நகராட்சித் தலைவர் பொறுப்புக்கு நீதான் போட்டியிட வேண்டும்’ என அன்புக் கட்டளையும் தென்னரசு இட்டிருந்தார். அந்த வெற்றிகளெல்லாம் தலைவருக்குக் கொண்டு வரப்படும் வாகை மலர்கள் என இருவரும் அறிவர். ‘பிரிய நண்பா’, என அவரது கவிதை மடல் சோகம் இசைத்தது.

‘தோளிலே கை வைத்து, உன் கன்னத்தைத் தட்டிப் பேசுவேனே... உன் சின்னப் புன்னகையை எப்படி மறப்பேன், சேதுபதிச் சீமையின் செந்தாமரை மலரே, கொண்ட கொள்கையில் உறுதி குலையா கோமேதகமே, கழகக் கொள்கையை சங்கநாதம் செய்த, சிங்க மறவனே’ என எழுத்துகள் வழி தனது துயரத்தைத் தொண்டர்களிடம் கடத்தினார் கலைஞர்.

’44 வயதிற்குள் கழக சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக, மாவட்டக் கழகச் செயலாளராக அரும்பணியாற்றி கழகத்தினர் அனைவரது ஒருமித்த அன்பைப் பெற்ற உடன்பிறப்பின் மறைவு, கழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்’ என ‘நெஞ்சுக்கு நீதி’யிலும் சத்தியேந்திரன் நினைவினைப் போற்றியிருக்கிறார் கலைஞர்.

சத்தியேந்திரனுக்குப் பின்னர், அவரது தம்பி ராஜேந்திரன், அவருக்குப் பின் அவரது மனைவி பவானி ராஜேந்திரன் என அவரது குடும்பமே அதே தொண்டுடன் தொடர்வதற்கு ‘நிழற்படமாக நிலையான இடம்பெற்ற’ என கலைஞர் போற்றிய சத்தியேந்திரனே உரம். சத்தியேந்திரன் அவர்களின் உழைப்பும், கலைஞரின் குறிப்பும் என்றென்றைக்கும் உடன்பிறப்புகளின் நெஞ்சங்களை விட்டு நீங்காது, நிலைத்து நிற்கும்.

...துடிக்கும்

## மும்மொழி என்றால், இந்திதான்!

‘மும்மொழிக் கொள்கை என்றால், இந்தித் திணிப்பு அல்ல, மாணவர்கள் விருப்பப்பட்ட இந்திய மொழி எதை வேண்டுமானாலும் படிக்கலாம்’ என்று தமிழ்நாட்டு பா.ஜ.க.வினர் கூறி வருகிறார்கள். இந்தியை நேரடியாகத் திணித்தால், தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அதனால், புறவாசல் வழியாக மும்மொழி என்று புகுத்தலாம் என்பதே, இதற்குள் ஒளிந்திருக்கும் சதித்திட்டம் என்று தி.மு.க. எச்சரிக்கிறது.

இந்த எச்சரிக்கை 100% சரிதான் என்பதை, ஒன்றிய அரசே நாடாளுமன்றத்தில் ஒப்புதல் தருவதுபோல் சில புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறது. இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் மும்மொழிக் கொள்கை எந்த அளவில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது, மூன்றாவது மொழியாக எந்தெந்த மொழிகள் கற்றுத் தரப்படுகின்றன என்ற விவரங்களை, ஒன்றியக் கல்வி அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அளித்திருக்கிறது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள 61.6% பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை நடைமுறையில் உள்ளது. குஜராத் 97.6% மற்றும் பஞ்சாப் 96.2% மாநிலங்களில்தான் அதிகப் பள்ளிகளில் இந்தி கற்றுத் தரப்படுகிறது. அண்டை மாநிலங்களான கேரளாவில் 71.7%, கர்நாடகாவில் 76.4% பள்ளிகளில் மும்மொழிகள் கற்றுத்தரப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டிலோ வெறும் 3.2% பள்ளிகளில் மட்டும்தான் மும்மொழிகள் கற்றுத்தரப்படுகின்றது. அருணாச்சலப் பிரதேசம் (0.3%), நாகாலாந்து (2.5%) மாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கைக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

## ஃப்ளாஷ்பேக்



### பவானி நகரில் தலைவருக்கு வரவேற்பு!


பவானி எஸ்.ஏ.அன்பழகன்

கழக இளைஞர் அணி உருவாக்கப்பட்ட போதே, அதில் உறுப்பினராக இணைந்தேன். 1991-ஆம் ஆண்டில் பவானி நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தேன். அந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் 7- ஆம் தேதி, பவானி நகரில் எனது தலைமையில், அன்றைய நகரச் செயலாளர் ப.சீ.கிருட்டிணசாமி அவர்கள் ஏற்பாட்டில், பொதுக்கூட்டம் நடத்தினோம். கூட்டத்திற்கு வருகை தந்த அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களை பொன்னாடை அணிவித்து, வரவேற்றபோது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது..

**– பவானி எஸ்.ஏ.அன்பழகன்,**
**மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி,**
**பவானி, ஈரோடு மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இலங்கை மாநாடும் ஒத்திவைப்பும்...

1952-ஆம் ஆண்டு, மே மாதம் 18-ஆம் தேதி இலங்கையில் கழகத்தின் மாநாடு நடைபெறுவதாக இருந்தது. அந்த மாநாட்டுக்கு சி.பி.சிற்றரசு, என்.வி.நடராசன், கலைஞர் ஆகியோர் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மூவருக்கும் இலங்கை செல்வதற்கான அனுமதியை அரசு வழங்கவில்லை. எனவே, மாநாடு நடைபெறாமல் ஒத்திவைக்கப்படுவதாக மாநாட்டு வரவேற்புக் குழுவினரால் அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131